**பன்வில பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 21 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் பன்வில பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 9,800,000 பெறுமதியான காணி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | மூலதனமாக்க நடவடிக்கை எடுக்கிறேன் |
| (ii) | 2012 ஆண்டின் போது ஹுலுகங்கை பார்வைகூடத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட ரூபா 1,190,406 பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர் வரும் ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நூலக புத்தகங்கள் கணக்கில் மீதி மற்றும் துணை பதிவேடுகளில் காட்டப்பட்ட மிதிகள் இடையில், ரூபா 42,197 வித்தியாசம் ஆனது. | குறித்த மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சீர்செய்ய வேண்டும் | இணங்காமை தொடர்பாக பதில் அனுப்புகிறேன். |

(இ) **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,062,326 ஆனது. | பெற வேண்டிய மீதிகள் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தில் கலந்துரையாடி முன் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,610,914 ஆனது. | செலுத்த வேண்டிய கணக்குகளை தீரக்க நடவடிக்கை எடக்க வேண்டும். | மீதி மேலும் நிலவுவதாக அறிக்கையிடுகிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | | | |
| (i) | 126 (vii)ஊ மற்றும் (xxx) உப பிரிவுகள் | விளம்பர பலகை கட்டணம் ரூபா 328,086 அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபை அதிகாரச்சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 149 ஆம் பிரிவு | சுற்றுலா சபைக்கு சமர்ப்பிக்கும் நிதிக் கூற்றுக்கள் பெற்றுக் கொள்ளாததனால் அறவிட முடியுமான வருமானமொன்று சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | சுற்றுலா சபைக்கு சமர்ப்பிக்கும் நிதிக் கூற்றுக்கள் மீது வருமானம் அறவிடப்பட | பட்டயம் பெற்ற கணக்காளர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்ட கணக்கு தொகுயின் மீது வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வேண்டும். | |
| (ஆ) | 2016 மார்ச் 17 திகதிய 2016/03 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின்.10 ஆம் பந்தி | கடையறைகள் உப குத்தகைக்கு வழங்க முடியாது இருந்த போதும் 15 கடையறைகள் உப குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,675,644 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 3,648,584 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 1,488,000 | 1,493,076 | 1,377,915 | 446,318 | 1,438,000 | 1,491,634 | 1,316,746 | 379,104 |
| (ii) | வாடகை | 1,228,800 | 1,124,650 | 1,103,907 | 66,915 | 1,077,571 | 1,113,528 | 1,106,580 | 42,751 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,845,250 | 3,077,965 | 3,026,965 | 72,000 | 2,226,000 | 2,978,946 | 2,941,946 | 37,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,416,600 | 3,209,775 | 1,007,405 | 2,612,269 | 1,119,800 | 2,273,795 | 1,397,710 | 1,055,090 |
| | | 7,978,650 | 8,905,466 | 6,516,192 | 3,197,502 | 5,861,371 | 7,857,903 | 6,762,982 | 1,513,945 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தளின் செயலாற்றுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் சேர்க்கப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 10,419,411 ஆன போதும், ஆண்டினுள் சேர்க்கப்பட்ட வருமானம் ரூபா 6,516,192 ஆனமையால் வருமானம் சேகரிப்பதன் முன்னேற்றம் 62 சதவீதமானது. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கிறேன். |

**2.2.3 நீதிமன்ற தண்டப ்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 631,550 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 883,700 கிடைக்க வேண்டியதாக இருந்தது. | குறித்த பணத்தை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை தொகையை பெற்றுக் கொள்வதற்காக அட்டவணை பிரதான செயலாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) **துணைச் சட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை மேற் கொள்ள துணைச் சட்டம் விதிக்கப்பட வேண்டியிருந்த போதும் 18 விடயங்களுக்காக மாத்தரம் துணைச்சட்டம் விதிக்கப்பட்டிருந்தது. | சபைக்கு வருமானம் ஈட்ட முடியுமான துணைச் சட்டங்களை விதித்துக் கொள்ள வேண்டும். | துரிதமாக பதில் தயாரித்தனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன் |

**(ஆ) ஒதுக்கீடு மேற்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் சபையினால் மேற்கொள்ளவிருந்த செயற்பாடுகளிற்காக பாதீட்டினூடாக ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்தை செயற்படுத்தும் வகையில் பாதீட்டை தயாரிக்க வேண்டும். | துரிதமாக பதில் தயாரித்தனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன் |

**(இ) எதிர்பார்த்த நலன்கள் (out come) பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஹுமுகங்க மீன் கடையை 2017 ஆண்டு முதல் மூடப்பட்டிருந்தது. | பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டில் மாற்று வியாபார்த்திற்காக டென்டர் மூலம் குத்தகை வழங்க 2018 திசெம்பர் 03 திகதி பத்திரிகை விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது. |

**(ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேசங்களிலிருந்து தினத்தோறும் 01 டொன் அளவான கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்வதுடன், உக்கலடையாத கழிவுப் பொருட்களை ஹாத்தலே மொறஹெல காணி மற்றும் சென்ஜோன்ஸ் ஹீல்ஸ் காணியிற்கு முறையற்றதாக வெளியிடப்படுகிறது. இக் காணிகள் அதிக பள்ளத்தாக்காகையால் குப்பைகளை வெளியிடல் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு காரணமாவதால் நகல்ஸ் பாதுகாப்பரண் அன்மித்து குப்பை வெளியிடல் சுற்றாடல் மாசடைதலுக்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது. | கழிவுப் பொருள் முகாமைத்துவத்தை முறையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் காணியொன்றை கொள்வனவு செய்ய பரிந்துரை பெற்ற பின்னர் காணியை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க முடியுமாகையால், அதன் போது குப்பைகளை வெளியிடல் மிகவும் ஒழுங்கமைக்கப்படும். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான அளவுகோள்களை இனங்கண்டிக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | துரிதமாக பதில் தயாரித்து அனுப்ப நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 30 கடையறைகளுக்காக 2009 ஆண்டு மதிப்பீட்டை செயற்படுத்தியிருக்காததுடன், சபைக்கு ரூபா 1,416,500 ஆன வருமானமொன்றும் 2016 ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை செயற்படுத்தாததனால் ரூபா 1,573,000 ஆன வருமானமும் இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு குத்தகை வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் 2017 பெபரவாரி 25 திகதிய கடிதம் பிரகாரம் மதிப்பீட்டை தற்காலிகமாக கைவிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2018 நிதி ஆண்டு வரை குறித்த மதிப்பீட்டை செயற்படுத்தவில்லை. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 08 காணித் துண்டுகளிற்காக 2018 மதிப்பீட்டின் பிரகாரம் ஒப்பந்தம் கைச்சாத்திட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மதிப்பீட்டு குத்தகை வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலவுகின்ற பிரச்சினைகளை சபைக்கு முன்வைத்து தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 ஊழியர் வெற்றிடங்கள் ஆனது. | ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வெண்டும். | இவ் வெற்றிடங்க நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4 சொத்துக்கள் முகாமை**

**3.4.1 சொத்துக்களின் பெற வேண்டிய வருமானம் பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 24,880,000 பெறுமதியான 02 வாகனங்களை பயன்பாட்டிற்கு எடுத்திருக்கவில்லை. | இவ் வாகனங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் | சாரதிகள் இல்லைமையினால் பாவனைக்கு எடுக்கப்படாததுடன். சாரதிகளை ஆட்சேர்க்க ஆரம்ப வேலைகள் செய்யப்பட்டுள்ளது. வருமானம் ஈட்ட ஈடுபடுத்திக் கொணடு இருப்பதாக அறிவிக்கிறேன் |

### 3.4.2 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஒரு அலுவலர் ஒரு தினத்தில் ஒரே நேரத்தில் 02 வாகனங்களை கி.மீ 417 பயன்படுத்தியிருந்தார். | முகாமையினால் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதவாறு கவனத்திக் கொள்கிறேன். |
| (ஆ) | கடமை நடவடிக்கைகளுக்கு வெளியே சபையின் கெப் வண்டியை 48 தினங்களில் 4341 கி.மீ ஓட்டத்தில் ஈடுபடத்தி எரிபொருளிற்காக ரூபா 45,821 செலவிடப்பட்டிருந்தது. | கடமைகளிற்கு வெளியே வாகனங்களை பயனபடுத்தக் கூடாது. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதவாறு கவனத்திக் கொள்கிறேன். |

### 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்படாமல் ரூபா 1,181,796 ஆன பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்காலத்தில் இவ்வாறான குறைகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.5.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஹுமுகங்க பார்வை கூடத்தின் பிரதான உட்பிரவேச பாதையில் பாதுகாப்பு மதில் ரூபா 1,472,704 செலவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள போதும், இப் பாதுகாப்பு மதில் வெடித்து சாய்ந்திருந்ததால் உடைந்து செல்லும் அபாயம் நிலவியது. அதனால் சொத்துக்கள் மற்றும் உயிராபத்து ஏற்படும் அபாயமும் நிலவியது. | நிர்மாணங்கள் நியமத்திற்கு மேற்கொள்ளப் பட வேண்டும். | மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன், கணக்காய்வினால் நட்டத்தை ரூபா 1,472,704 என சுட்டிக்காட்டிய போதும் மதிலை 03 பகுதிகளாக மேற்கொண்டதனால் தற்போது சாய்ந்துள்ள மதிலின் செலவினம் ரூபா 515,789 என பொறியிலாளர் அறிவித்துள்ளார். தொழிநுட்ப மற்றும் பொறியியல் ஆலோசனைகளின்றி மண் நிரப்பியதால் மதில் சாய்ந்ததாக பொறியிலாளரின் கருத்தாகும். |